இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1739 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

பதவிகள் – வெற்றிடம்

இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான் படையில் பூமி தொழிற்பாட்டாளர் துறையில் வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகிறது :

1. (அ) தேவைப்படும் கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி சாதாரண சித்தியும், ஆறு பாடங்களில் (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்தியடைதல் வேண்டும்.

(ஆ) ஏனைய தகைமைகள்.- இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(1) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) வயது (ஆண்).- 2012, சனவரி 31 ஆந் திகதியன்று 18-23 வரை இருத்தல் வேண்டும்.

(3) உயரம்.- 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்.

(4) உடல் நிறை.- 17< உடற்பருமன் சுட்டி <26

உடற்பருமன் சுட்டி (BMI) = நிறை (கி. கி.) / உயரம் ²(மீ)

(5) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2

(6) தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(7) குடியியல் நிலை.- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய வான்படை வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 1 (இ), (அ), (ஆ) இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த வுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான் படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் கவனத்திற் கொள்ளப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- (அ) வான்படை வீரர்கள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்கள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கட்டாயமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **அரச கருமமொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகருமமொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

7. (1) ஒரு வருடத்திற்கு வான் படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

விமான வீரன்	:	ரூபா 1,68,000-6 x 1,440-19 x 1,800 = ரூபா 2,10,840
முன்னணி விமான வீரன்	:	ரூபா 1,70,880-4 x 1,440-19 x 1,800 = ரூபா 2,10,840
கோப்ரல்	:	ரூபா 1,75,200-1 x 1,440 - 10 x 1,800 - 9 x 2,500 = ரூபா 2,17,320
சார்ஜன்ட்	:	ரூபா 1,80,240-3 x 1,800 - 9 x 2,520 - 3 x 3,480 = ரூபா 2,18,760
பிளைட் சார்ஜன்ட்	:	ரூபா 1,83,840-1 x 1,800- 9 x 2,520 - 3 x 3,480 = ரூபா 2,18,760
அதிகாரம்பெற்ற அலுவலர்	:	ரூபா 2,11,800-13 x 3,480 = ரூபா 2,57,040

பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் : ரூபா 2,11,800-13 x 3,480 = ரூபா 2,57,040

மேற்குறிப்பிட்ட சம்பளத் திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்களுக்கு சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) ***வேறு கொடுப்பனவுகள் :***

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 5,850 ;

(2) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 620 ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 4,500 வழங்கப்படும் ;

(4) விசேட கடினப்படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,480 வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;

(5) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இலிருந்து 850 வரை) ;

(6) விசேட கொடுப்பனவு.- அடிப்படை சம்பளத்தில் 5% ;

(7) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான் படை வீரர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 10,619.67 (உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவச உணவு வசதி) ;

(8) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(9) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(10) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(11) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(12) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாத மொன்றுக்கு ரூபா 30 இலிருந்து ரூபா 204 வரை வழங்கப்படும் ;

(13) சீருடைக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும் ;

(14) மீள அமர்த்தலுக்கான சம்பளம்.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(15) மருத்துவம்.- வான்படையின் செலவில் வான்படை வீரர் களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(16) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(17) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாக மானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இல் இருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(18) விரிவுரையாளர் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவ ராவர்.

(19) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(20) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வுதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

8. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லா இடைவெளிகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில் துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில்தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

9. நேர்முகப் பரீட்சை ஏக்கல, இலங்கை வான்படை நிலையத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சை 2012, சனவரி 3, 4 மற்றும் 5 ஆந் திகதிகளில், 9.00 மணி முதல் 13.00 மணிவரை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பதாரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

10. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமான வர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

12. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

13. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

14. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை வான்படை

வான்படை வீரர்களுக்கான ..... பதவி

1. முழுப் பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டைப்படி)

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, சனவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.
4. அஞ்சல் முகவரி :----.
5. நிரந்தர முகவரி :----.
6. நிரந்தர முகவரியின் பொலிசு நிலையம் :----.
7. மாவட்டம் :----.
8. தேர்தற் தொகுதி :----.
9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
10. தொலைபேசி இலக்கம் :----.
11. பிறந்த திகதி :----.
12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.
13. உயரம் : அடி ---- அங்குலம் ----.
14. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

ஆண்டு	சுட்டிலக்கம்	சித்தியடைந்த பாடங்கள்	பெற்ற தரங்கள்

15. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

ஆண்டு	சுட்டிலக்கம்	சித்தியடைந்த பாடங்கள்	பெற்ற தரங்கள்

16. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)
17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.
18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.
19. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.
20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.
21. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

பெயர்	பதவி	நிரந்தர முகவரி

23. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக் குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12-939

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

கிராம அலுவலர் சேவையில் I, II, III ஆம் தரத்திலான அலுவலர்களுக்கான வினைத்திறமை தடைகாண் பரீட்சை

2011.12.02 ஆந் திகதிய 1735 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல் வெளியான கிராம அலுவலர் சேவையின் I, II, III ஆம் தர அலுவலர்களுக்கான வினைத்திறமை தடைகாண் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் கோருதல் பிற்போடப்பட்டுள்ளது என்றும், அதற்காக மீண்டும் விண்ணப்பப்படிவங்கள் கோருவது பற்றி இதன் பின்னர் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.
2011.12.13.
12-1138

பகுதி I : தொகுதி (II_ஆ) - விளம்பரங்கள்

கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

இலங்கை புகையிரத சேவைகள்

கொள்வனவு அறிவித்தல்

இலங்கை புகையிரத சேவைகளுக்கு 2000 லோக்கோமோட்டிவ் ரயர்களை (Locomotive Tyres) **வழங்குதல்**

கொள்வனவு இல. எஸ்ஆர்எஸ்/எப். 6847

இலங்கை புகையிரத சேவைகளுக்கு 2000 லோக்கோமோட்டிவ் ரயர்களை (Locomotive Tyres) வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள், இலங்கை, கொழும்பு 10, இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை, போக்குவரத்து அமைச்சில் மந்திரிசபை கொள்வனவுக் குழு தவிசாளரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

உற்பத்தியாளர்கள் தமது அற்றோணி அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் மூலமும் கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் முடிவடையும் நாள் 2012.01.13 ஆந் திகதி பி. ப. 2.00 மணியாகும் (இலங்கை நேரம்).

3. மீளளிக்கப்படாத கொள்வனவுக் கட்டணம் 10,000 இலங்கை ரூபாவை அல்லது இலகுவில் மாற்றத்தக்க நாணயத்தில் அதற்குச் சமமான தொகையைச் செலுத்துவதன் மூலம் 2011.12.02 ஆந் திகதி தொடக்கம் 2012.01.11 ஆந் திகதிவரை மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை (இலங்கை நேரம்) இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடிய படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீள் செலுத்தப்படாத குறிப்பிட்ட ரூபா 10,000 கட்டணம் அதற்கான மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயம் மூலம் மேற்குறிப்பிட்ட காலத்தினுள் அந்நாடுகளின் தூதுவராலய அலுவலகத்திற் செலுத்தமுடியும் என்பதோடு, விலைமனு ஆவணங்கள் அத்தூதுவராலய அலுவலகத்தின் மூலமாக கிடைக்கப்பெற்ற "இலங்கை புகையிரத களஞ்சிய அத்தியட்சகர், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை" இற்கு கோரிக்கைவிட வேண்டும். குறிப்பிட்ட ரூபா 10,000 (வெளிநாட்டு நாணயமாற்றுத் தொகை) மீண்டும் செலுத்தப்படமாட்டாது.

4. இலங்கை, கொழும்பு 10, இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை, போக்குவரத்து அமைச்சில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் அல்லது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

5. முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை பதிவுஞ்சல் மூலம் அனுப்பவேண்டிய அல்லது நேரில் ஒப்படைக்கவேண்டிய முகவரி வருமாறு :-

தவிசாளர்,
மந்திரிசபை கொள்வனவுக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை கட்டணமின்றி இலவசமாக, "இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் பரிசீலிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சிய திணைக்களம்,
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

தொலைபேசி இல. : 94(11)2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11)2432044.
மின்-அஞ்சல் முகவரி : srs.slr@gmail.com
தொடர்பு இல. : எஸ்ஆர்எஸ்/எப். 6847.

தவிசாளர்,
மந்திரிசபை கொள்வனவுக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

12-1142

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : அனுக்ரா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 82799
பதிவுத் திகதி : 2011.11.30
பதிவு விலாசம் : இல. 59/4/பி, அம்பதலே வீதி, கொயிலவத்த, அங்கொடை

12-1062

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவாக குவான்டம் ரிசோட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது 2011, நவெம்பர் 15 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனி இலக்கம் : பீவீ 82503
பதிவு முகவரி : இல. 33, புனித மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 3

பணிப்பாளர்.

12-1043

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : வீ ஸோன் டெக்னோலஜீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 78370
பதிவுத் திகதி : 2011.04.18
பதிவு முகவரி : இல. பி34, மொஸ்குவட், ஹப்புகஸ்தலாவ

பணிப்பாளர்.

12-1104/2

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : லங்கா பிரிமியர் பூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 82936
பதிவுத் திகதி : 2011.12.07
பதிவு முகவரி : இல. 10, மைல்கல் அவெனியூ, கொழும்பு 3

கன்சல்டன்ட்ஸ் அன்ட் கோர்ப்பரேட் செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.
தொலைபேசி : 2689618.

12-1104/1

கூட்டிணைப்பதற்கான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பிரிவு 9(1) இன்கீழான கம்பனிகள் சட்டம்

கம்பனி பெயர் : டெப்ரபேன் எனர்ஜி (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 80874
பதிவுத் திகதி : 2011.08.24
பதிவு முகவரி : இல. 16/3, சரசவி கார்டன், நாவல வீதி, நுகேகொடை

ஷாட் பிசினெஸ் சிஸ்டெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 141/3, வொக்சோல் வீதி,
கொழும்பு 2.
12-1135

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழான கூட்டிணைப்பு அறிவித்தல்

கம்பனி பெயர் : எயாபோட் எக்ஸ்பிரெஸ் எயா என்ட் ரெயில் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 73075
பதிவுத் திகதி : 2010.07.26
பதிவு விலாசம் : இல. 141/3, வொக்சோல் வீதி, கொழும்பு 2

ஷாட் பிசினெஸ் சிஸ்டெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 141/3, வொக்சோல் வீதி,
கொழும்பு 2.
12-1136

வெஸ்றன் அக்ரி பிசினெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

வெஸ்றன் அக்ரி பிசினெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 6 ஆந் திகதி பீவீ 82920 ஆம் இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென் பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது கந்தானை, த மெஸன்ட கிரவுன்ட் காம்ப்ளெக்ஸ் வீதி, இல. 117/2டீ இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

எம். அன்ட் என். ஏஜென்ஸ் அன்ட் செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

எம். அன்ட் என். கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.
12-1103

கம்பனியின் பெயர் மாற்றம் மற்றும் கம்பனியின் தரத்தை மாற்றுதலும் மீதான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டம் 11(5) பிரிவின்கீழ் பின்வரும் அறிவித்தல் தரப்படுகின்றது :-

பழைய பெயர் : ஒக்சிகோஜென்ட் இன்டெநஷனல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 3458
பதிவு முகவரி : இல. 130, கிளனி வீதி, கொழும்பு 2
கம்பனி புதிய பெயர் : ஜோன் கீல்ஸ் பீ. பி. ஓ. சொலூசன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

சபையின் அனுமதியின்படி,
கீல்ஸ் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

12-1061

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : யோர்க் ஸ்ரீட் பாட்னர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 81831
பதிவுத் திகதி : 2011.10.12
கம்பனியின் பதிவு முகவரி : இல. 3, புல்லர்ஸ் லேன், கொழும்பு 7

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2011.10.26.
12-1053

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சதர்ன் எட்ஜ் கமிலியா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 82066
பதிவுத் திகதி : 2011.10.24
கம்பனியின் பதிவு முகவரி : தலவ்வ றோட், ஹொரங்கல்ல, தல்கஸ்வல, காலி

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2011.10.26.
12-1054

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : இன்டடொரா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 82118
பதிவுத் திகதி : 2011.10.25
கம்பனியின் பதிவு முகவரி : இல. 90ஏ, பாகொட றோட், பிட்டகோட்டே, கோட்டே

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2011.11.02.
12-1055

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : யுனைட்டெட் ட்றேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 81943
பதிவுத் திகதி : 2011.10.18
கம்பனியின் பதிவு முகவரி : இல. 10/7சீ, கிறீன்லான்ட்ஸ் லேன், கொழும்பு 5

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2011.10.20.
12-1056

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : அப்பலோ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீபி 82206
பதிவுத் திகதி : 2011.10.31
கம்பனியின் பதிவு முகவரி : இல. 45, பிரேபுறூக் வீதி, கொழும்பு 2

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2011.11.01.
12-1057

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : அப்லிமுன்டூ (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 82018
பதிவுத் திகதி : 2011.10.20
கம்பனியின் பதிவு முகவரி : இல. 121, தலவத்துகொட றோட், பிட்டகோட்டே, கோட்டே

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2011.10.31.
12-1058

அற்றோணித் தத்துவத்தை இல்லாதாக்குதல்

இரத்மலானை, மொடல் டவுண், 2 ஆவது ஒழுங்கையில் 31 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பேதுரு ஹேவா சூரியகாந்தி சந்தனிக்கா டி சில்வா, சந்த மறக்கல ஜனிது சமீர டி சில்வா மற்றும் சந்த மறக்கல சோமசிறி ஆகிய நாம், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். டீ. தனுஜா தொலமுல்ல என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, பெப்புருவரி 9 ஆந் திகதிய 475 ஆம் இலக்கத்தைக் கொண்ட விசேட அற்றோணித் தத்துவத்தின்மூலம் பாலசூரிய ஆராச்சிகே மஹிந்த கருணாரத்ன பெரேரா என்பவருக்கு எம்மால் அளிக்கப்பட்ட எல்லா அதிகாரங்களையும் இத்தால் இல்லாதொழித்து, இல்லாதாக்கி, வெற்றானதாக்குகின்றோம் எனவும், எம்மால் அளிக்கப்பட்ட வேறெல்லா அதிகாரங்களையும் இல்லாதொழித்து இல்லாதாக்கு கின்றோம் எனவும், சொல்லப்பட்ட பாலசூரிய ஆராச்சிகே மஹிந்த கருணாரத்ன பெரேரா என்பவருக்கு இதன் பின்னர் எமது பெயரிலும் எமது சார்பிலும் ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு அல்லது கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கு அதிகாரமெதுவுமில்லை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

பேதுரு ஹேவா சூரியகாந்தி சந்தனிக்கா டி சில்வா,
சந்த மறக்கல ஜனிது சமீர டி சில்வா,
சந்த மறக்கல சோமசிறி.

12-983

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 23, பாணந்துறை வீதி, பண்டாரகமையில் வசிக்கும் விஜயலத் ஆராச்சிகே சுனில் சாந்த ஆகிய நான், ஹந்தபான்கொட கோம்பிட்டிய, கொடகவெலயில் வசிக்கும் கோம்பிட்டிய ஜயன்த குணவர்தன என்பவருக்கு 2011.01.14 ஆந் திகதிய பத்தரமுல்ல பதிவுத் திணைக்களத்தின் இலக்கம் 357 இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட பண்டாரகம, ஏ. காந்தி தயா அல்விஸ் பகிரங்க நொத்தாரிசு மூலம் 2010.12.01 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட இலக்கம் 279 உடைய அற்றோணி அதிகாரப்பத்திரத்தை 2011.12.02 ஆந் திகதி தொடக்கம் இவ்வறிவித்தல் மூலம் அகற்றிக்கொண்டதாகவும், அதிகாரத்தை செல்லுபடியற்றதாக்கிக் கொண்டதாகவும், இரத்துச் செய்வதாகவும், அவ்வாறே மேலே கூறப்பட்ட கோம்பிட்டிய கமஅத்திகே ஜயந்த குணவர்தன மூலம் என் பேரில் இதன் பிறகு மேற்கொள்ளப்படும் எல்லா கொடுக்கல் வாங்கல் பொறுப்புக்களிலிருந்தும் விடுபட்டுக் கொண்டதாகவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

விஜயலத் ஆராச்சிகே சுனில் சாந்த.

12-894

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆவது உறுப்புரையின் படி கீழ்க்குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : மட்டுப்படுத்தப்பட்ட ஐ கெயா இன்ஸ்ட்டிடியூட் (தனியார்)
பதிவு இலக்கம் : பீவீ 74688
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 212/18, நெலும் பிளேஸ், கலபளுவாவ, ராஜகிரிய
பதிவுசெய்யப்பட்ட திகதி : 2011, மார்ச்சு 23

பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைப்படி.

12-1187

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கம்பஹா மாவட்டத்தின் பிரசித்திபெற்ற நொத்தாரிசு திருமதி தீப்பானி விஜேசேகர என்பவரால், 3135 ஆம் இலக்க 2007.01.14 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் மஹரகம பமுனுவ, தேவால வீதி, இல. 174/பீ எனும் விலாசத்தில் வசிக்கும் புத்தமுவ முதியான்செலாகே நலின் பெரேரா ஜயசேகர (தே. அ. அ. இலக்கம் 710672580வீ) ஆகிய என்னால், மஹரகம பமுனுவ, தேவால வீதி, இலக்கம் 174/பீ எனும் விலாசத்தில் வசிக்கும் லொக்கு பொன்னம்பெருமகே சுமனாவத்தி (தே. அ. அ. இலக்கம் 436461453வீ) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை செல்லுபடி யற்றதாக்கி வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

புத்தமுவ முதியான்செலாகே நலின் பெரேரா ஜயசேகர.

12-1185

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 346(1) இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

வெனிவெல்ல இன்வெஸ்ட்மன்ற்ஸ் லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீபி 100

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாம், கொழும்பு 1, சனாதிபதி மாவத்தை, இல. 61 இல் அமைந்துள்ள வெனிவெல்ல இன்வெஸ்ட்மன்ற்ஸ் லிமிட்டெட் கம்பனியின் 2011, திசெம்பர் 5 ஆந் திகதி நடைபெற்ற அதனது அதிவிசேட பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் கலைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
வெனிவெல்ல இன்வெஸ்ட்மன்ற்ஸ் லிமிட்டெட்.

மே./பா., எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ்,
ரீஸ்றக்ச அன்ட் கோப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 04.
2011.12.30.
12-1109

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 346(1) இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

மைலன்ட்ஸ் இன்வெஸ்ட்மன்ற்ஸ் லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீபி 26

